**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.71/2015**

**Prosecution Witness: 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : பெருமாள் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**28.08.2024**
**முதல் விசாரணை**

நான் இறுதியாக ஊர்மச்சிகுளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று தற்போது தபால் தந்தி நகர் மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 16.08.2013 அன்று 20.00 மணிக்கு திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிவசுப்பிரமணியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்த மூலமாக புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நகர் காவல் நிலைய குற்ற எண். 474/2013, ச/பி. 457,381 இதச வாக வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அதை புகாருடன் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்பு மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு விசாரணைக்காக திருமங்கலம் நகர் வட்ட காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி**

14.08.2013 ம் தேதி காணாமல் போனதாக சொல்லப்பட்ட புகாரில் 16.08.2013 ம் தேதி இரவு 8 மணிக்கு தான் என்னிடம் கொடுத்தார்கள். காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் புகாரை பெற்ற உடன் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தேன். நான் கம்பெனிக்கு சென்று பார்த்து அதில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஆய்வாளர் பார்வைக்கு வழக்கு

கோப்புகளை ஒப்படைத்தேன். நான் மாதிரி வரைபடம் ஒன்றை கையால் வரைந்து வழக்கு கோப்பில் வைத்துவிட்டேன். அதில் கையொப்பம் எதுவும் இடவில்லை. அந்த படத்தோடு நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். ஆய்வாளரிடம் என்றைக்கு ஒப்படைத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த புகாரை ஆய்வாளரின் ஆலோசனைப்படி தயாரித்து நான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.